Koviloor Digital Library

புற ஒளியும் அக ஒளியும்

ACC NO: 2432
R65

டாக்டர் மு. தெய்வநாயகம் M.A., Ph.D

Koviloor Digital Library

Koviloor Digital Library 5-6

கடவுள் உண்டா? தொடர் - 2

2432

புற ஒளியும் அக ஒளியும்

கோவிலூர் ஆதீனம்
2432
R65
கோவிலூர்-630 307

டாக்டர் மு. தெய்வநாயகம் M.A., Ph.D.

திராவிட சமய அறக்கட்டளை,
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம்,
சென்னை-600 023. தொலைபேசி:044-2644 9032
E.mail:dravida@eth.net
Web site:http://www.geocities.com/dravidasamayam

2003

Koviloor Digital Library

முதல் பதிப்பு: செப்டம்பர் 1997
இரண்டாம் பதிப்பு:பெப்ரவரி 2003

இச்சிறு வெளியீடு 'கடவுள் உண்டா - வரிசை எண்-1' எனும் சிறு வெளியீட்டின் தொடர்ச்சியாக இருப்பதால் சில இடங்களில் வரிசை எண்-1-இல் இடம் பெற்ற கருத்துக்கள் இதில் சுட்டிக் காட்டப்படுகின்றன.

மெய்ப்பொருள் அச்சகம், சென்னை-23. தொலைபேசி:044-26471526

புற ஒளியும், அக ஒளியும்

புறக்கண்ணும், அகக்கண்ணும்

ஒரு மலரை எடுத்துக் கொண்டால் உடலின் தொடு உணர்ச்சியினால் அதன் மென்மையையும் மூக்கின் மோப்ப உணர்ச்சியினால் அதன் வாசனையையும் கண்ணின் காட்சி உணர்ச்சியினால் அதன் அழகையும் வாயின் சுவை உணர்ச்சி யினால் அதன் சுவையையும் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலே குறிப்பிட்டுள்ள புலன் நுகர்வுகளில் புலன்கள் சரியாகச் செயல்படுகின்ற ஒருவனுக்குப் புலன்களால் நுகரப்படுகின்ற பூ மட்டும் இருந்தால் போதும் என்று எண்ணலாம்.

சற்று ஆழமாக எண்ணிப் பார்ப்போம். பூ மட்டும் இருந்தால் போதுமா? அதன் மென்மையையும், அதன் வாசனையையும், அதன் அழகையும், அதன் சுவையையும் அறிந்து கொள்ள இயலுமா? இது ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

மேலே கூறப்பட்டுள்ளவற்றில் பூவின் மென்மையையும் அதனுடைய வாசனையையும் அதனுடைய சுவையையும் அறிந்து கொள்ளுவதற்குப் பூவைத் தவிர வேறு பொருளின் உதவி தேவையில்லை. பூவாகிய பொருளின் மென்மையை உடலின் தொடு உணர்ச்சியினாலும் பூவாகிய பொருளின் வாசனையை மூக்கின் நுகர்வு உணர்ச்சியினாலும் பூவாகிய

Koviloor Digital Library

பொருளின் சுவையை வாயின் சுவை உணர்ச்சியினாலும் அறிந்து கொள்ள முடியும்.

மெய், வாய், மூக்கு ஆகிய மூன்றும் செயல்பட பொருள் ஒன்றே போதும் என்பது நமக்கு விளங்குகின்றது.

ஆனால், பூவின் அழகைக் கண்ணால் பார்த்து அறிந்து கொள்ளுவதற்குப் பழுதுபடாத கண்ணாகிய பொறியும், பார்க்கப்படுகின்ற பொருளாகிய பூவும் இருந்தால் மட்டும் போதுமா? இந்த இரண்டையும் வைத்துக் கொண்டு பூவின் அழகைக் காண முடியுமா? என்னும் கேள்வி இங்கு எழுகின்றது.

மற்றப் புலன்களுக்கு அவற்றின் நுகர்வுக்குரிய பொருள் மட்டும் இருந்தால் போதும். ஆனால் கண்ணால் பார்க்கப் படுகின்ற காட்சிக்கு, கண்ணும் பொருளாகிய பூவும் ஆகிய இவை இரண்டு மட்டும் இருந்தால் போதாது.

எவ்வாறு?

இருட்டில் நின்று கொண்டு கையிலிருக்கும் பூவின் வண்ணங்களைக் கண்ணால் காண முடியுமா? என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது. பொறியாகிய கண்ணும் பொருளாகிய பூவும் ஆகிய இரண்டு பொருள்கள் மட்டும் இருந்தால் போதாது என்பது நமக்கு விளங்குகிறது. அங்கே மூன்றாவது ஒரு பொருள் தேவை. அதுவே வெளிச்சம் அல்லது ஒளி என்பதாகும்.

ஐம்பொறிகளிலும் சிறந்ததாகக் கண் உணரப்படுகிறது. “கண்ணிற் சிறந்த உறுப்பில்லை” என்பது ஆன்றோர் வாக்கு. சிறந்த உறுப்பாகிய கண் செயல்படுவதற்குப் பார்க்கப்படுகின்ற

Koviloor Digital Library 5-6

பொருள் மட்டும் இருந்தால் போதாது. கண்ணுக்குப் புறத்தே இருந்து கண் பார்ப்பதற்குத் துணை செய்யக்கூடிய ஒளி இன்றியமையாத ஒன்றாகும்.

கண்பார்வைக்குத் துணை நிற்கக்கூடிய ஒளிகளில் சூரிய ஒளியே தலைமையானதாகும். கண்ணுக்கு ஒளியைக் கொடுக்கக் கூடிய சூரியன் இல்லாவிட்டால் கண் இருந்தும் அதனால் திறமையாகச் செயல்பட இயலாது. சூரியன் இல்லையென்றால் உலக உயிர்களெல்லாம் ஒடுங்கிவிடும். கண்ணும் ஒடுங்கி, உயிரினங்களில் ஒன்றாகிய மனிதனும் ஒடுங்கி விடுவான்.

மூன்று நிலைகள்

சூரிய ஒளி கண்களுக்குக் கிடைக்கும் தன்மையைப் பொறுத்து அதை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சூரிய ஒளி முழுமையாகக் கிடைக்காத நிலை - மழைக்காலத்து அமாவாசை நடு இரவு - இருள்நிலை.
2. சூரிய ஒளி அரைகுறையாகக் கிடைக்கும் நிலை - மாலையில் சூரியன் மறைந்த நிலை - மாலைமயங்கும் நேரம் - ஒளியும், இருளும் கலந்த நிலை - மருள்நிலை.
3. சூரிய ஒளி முழுமையாகக் கிடைக்கும் நிலை - மேக மூட்டம் இல்லாத நண்பகல் - ஒளிநிலை.

(i) இருள்நிலை

மேலே கூறப்பட்டுள்ள மூன்று நிலைகளிலும் கண்களின் செயல்பாடுகள் மூன்றுவிதமாய் இருக்கின்றன. முதல்

Koviloor Digital Library

நிலையில் அமாவாசை நள்ளிரவில் கண் இருப்பதும், இல்லா திருப்பதும் ஒன்றாகவே அமைந்து விடுகிறது. கண் இல்லாத வனாலும் பூவைப் பார்க்க இயலாது. கண் இருப்பவனாலும் பூவைப் பார்க்க இயலாது. அதுவே இருள் நிலை.

(ii) மருள் நிலை

இரண்டாம் நிலை மருள்நிலை. இந்த நிலையில் முழுமை யான வெளிச்சமும் இல்லை. முழுமையான இருளும் இல்லை. மாலை மயங்கும் நேரம் - ஒன்றை வேறொன்றாகத் தவறாக எண்ணுகின்ற மருள் நிலை - பாம்பைக் கயிறாகவும் கயிற்றைப் பாம்பாகவும் எண்ணித் துன்பத்திற்குள்ளாகும் மயக்க நிலை.

(iii) ஒளிநிலை

மூன்றாம் நிலை ஒளி நிலை; நண்பகல் நேரம் முழு ஒளியைப் பெறும் காலம்; எவ்விதத் தயக்கத்திற்கும் இடமின்றிப் பொருளை உள்ளது உள்ளபடியே அறிந்து கொள்ளுகின்ற தெளிவு நிலை. இந்நிலையில் பொருளைப் பற்றி எந்தச் சந்தேகமும் இல்லை - இதுவே ஒளிநிலை.

புற ஒளி

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளை யுடைய உயிரினங்கள் அனைத்திற்கும் ஒளி கொடுக்கும் சூரியன் இன்றியமையாததாக விளங்குகின்றது. சூரியன் இல்லையேல் உயிரினங்களின் செயல்பாடுகள் ஒடுங்கி விடுகின்றன.

Koviloor Digital Library

சூரியன் உயிரினங்களின் புறத்தே இருக்கின்ற உறுப்புகளில் ஒன்றாகிய கண் பார்ப்பதற்கு உதவி செய்கின்ற அல்லது உறுதுணையாய் இருக்கின்ற புற ஒளியைக் கொடுப்பது ஆகும்.

அக ஒளி

ஐந்து அறிவுகளைக் கொடுக்கும் வெளி உறுப்புகளைத் (மெய், வாய், கண், மூக்கு, செவி) தாண்டி ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைக் கொடுக்கும் உறுப்பாக இருப்பதே உள்ளம் என்பதை முன்னர்ப் பார்த்துள்ளோம். இது மனிதனுக்கே உள்ள சிறப்பு உறுப்பு ஆகும் என்பதையும் நாம் கண்டுள்ளோம். உள்ளத்தின் செயல்பாடே பகுத்தறிவாகும். உள்ளத்தின் செயல்பாடாகிய பகுத்தறிவு என்று கூறும்பொழுது மனிதனுக்கு மட்டுமே உரியது. இந்த ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு. எதைப் பகுத்து அறிவது? என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

நன்மை, தீமை இரண்டையும் சரியாகப் பகுத்து அறிந்து தீமையை விலக்கி, நன்மையைச் செயல்படுத்துவதே பகுத்தறிவின்பயன் என்பது நமக்கு விளங்குகின்றது.

நன்மை என்பது உடலுக்கு நன்மையா, உயிருக்கு நன்மையா, உள்ளத்துக்கு நன்மையா என்னும் கேள்விகள் இங்கு எழுகின்றன. உடலுக்கு நன்மை என்று சொன்னால் உடலை அழியாமல் பாதுகாக்கும் வேலையை உயிர் செய்கின்றது என்பதைப் பார்த்துள்ளோம்.

உயிரின் இச்செயல்பாட்டையே இயல்பூக்கம் (Natural instinct) என்பதாக முன்னர்ப் பார்த்துள்ளோம். உடலை அழியாமல் பாதுகாக்கின்ற வேலையை உயிர் செய்கின்ற காரணத்தால் உயிரை உடைய மனிதன் உட்பட எல்லா

Koviloor Digital Library

உயிரினங்களுக்கும் உயிர் பொதுவானதாக விளங்குகின்றது. ஆகவே, மனிதனுக்கு மட்டுமே உள்ள பகுத்தறிவு என்பது மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் இருக்கின்ற இயல்பூக்கத்தைக் குறிக்காது.

அப்படியானால் எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான இயல்பூக்கத்திற்கு மாறுபட்ட, மனிதனுக்கு மட்டுமே உரிய ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு என்றால் என்ன? என்ற கேள்வி இங்கு எழுகின்றது. பகுத்தறிவு என்பது உடல் நன்மைக்கான பகுத்தறிவா? உயிர் நன்மைக்கான பகுத்தறிவா? உள்ளத்தின் நன்மைக்கான பகுத்தறிவா? என்னும் கேள்வி களில் உடல் நன்மைக்கான பகுத்தறிவை உயிர் செயல்படுத்தி வருகின்ற காரணத்தால் உடல், உயிர், உள்ளம் ஆகிய மூன்று பகுதிகளில் உடலும் உயிரும் போக, உள்ளம் மட்டுமே எஞ்சி நிற்கின்றது.

ஆகவே, ஆறாவது அறிவை உடைய மனிதனுக்கு மட்டுமே பகுத்தறிவு உள்ளது என்று கூறும்பொழுது அது உள்ளத்திற்குரிய நன்மை, தீமையை மட்டுமே பகுத்து அறியும் அறிவு என்பதும் அதுவே மனிதனுக்கு மட்டுமே உள்ள ஆறாவது அறிவு என்பதும் நமக்குப் புலப்படுகின்றன.

அப்படியானால் உள்ளத்துக்குரிய நன்மை எது, உள்ளத் துக்குரிய தீமை எது என்பதை இப்போது நாம் பிரித்தறிய வேண்டியதிருக்கின்றது. உள்ளத்துக்குரிய நன்மை எது?

உடல், உயிர், உள்ளம் என்னும் மூன்றில் உடலும், உயிரும் மனிதனைத் தவிர மற்ற உயிரினங்களுக்கும் உரியவை என்பதையும் உள்ளம் என்பது மட்டுமே மனித னுக்குச் சிறப்பாக உரியது என்பதையும் இதுவரைபார்த்துள்ள

Koviloor Digital Library

நாம் உள்ளத்திற்குரிய நன்மை, தீமை எது என்று பகுத்து அறிய முற்படும்பொழுது அது உள்ளத்தை உடைய மனிதனுக்குரிய நன்மை, தீமை எது என்பதை அறிவதாகவே ஆகிவிடுகின்றது.

ஆகவே, ஒருவன் தனக்குரிய நன்மை எது, தீமை எது என்பதைப் பகுத்தறிவதே ஆறாவது அறிவு என்று ஆகின்றது.

தனக்குரியது என்றால் தன்னுடைய உடலுக்குரியது இல்லை என்பதும் உடலுக்குரியது இல்லை என்றால் இந்த உடல் மறைந்த பின்னும் தான் மறையாமல் இருக்கின்ற உள்ளத்துக்குரியதென்றும் பொருள்படுகிறது.

உள்ளத்தைச் சிற்றுள்ளம் என்றும், பேருள்ளம் என்றும் இரு பிரிவாகப் பார்த்தோம். சிற்றுள்ளம் என்பது மனிதனைக் குறிக்கின்றது என்பதையும் பேருள்ளம் என்பது கடவுளைக் குறிப்பது என்பதையும் பார்த்துள்ளோம்.

சிற்றுடல் மறையும்பொழுது அது பேருடலோடு இணைகின்றது என்பதையும் சிற்றுயிர் மறையும்பொழுது அது பேருயிரோடு இணைகின்றது என்பதையும் பார்த்தோம்.

அவ்வாறே சிற்றுள்ளம் இந்த உடலிலிருந்து நீங்கும் பொழுது பேருள்ளத்தோடு இணைவதே முறையாகும்.

ஆகவே, மனிதன் இறக்கும்பொழுது அவன் கடவுளோடு சேர்கின்றான் என்பதே இயல்பான நிலையாக இருக்கின்றது.

கடவுள் என்பது இப்பேரண்டம் முழுவதையும் ஓர் ஒழுங்கில், ஒரு நியதியில் ஆட்சி செய்கின்ற, என்றும் மாறாத ஒரு பேருள்ளம் என்பதையும் மனிதன் என்பது இவ்வுலகத்தில்

Koviloor Digital Library

உள்ள உயிரினங்களை ஆட்சி செய்யும் தன்மையுள்ள சிற்றுள்ளம் என்பதையும் நாம் முன்னர்க் கண்டுள்ளோம்.

இந்த 'ஆட்சி' என்பது உலகில் தோன்றி மறையும் அரசாட்சிகளைப் போன்றதன்று. இந்த அரசாட்சிகளெல்லாம் மிகக் குறுகிய காலத்து ஆட்சிகளாகும். ஆனால் பேருள்ள மாகிய கடவுளின் ஆட்சி காலவரையறைக்கு அப்பாற்பட்ட ஆட்சியாகும். ஆட்சிக்கும் அதிகாரத்திற்கும் தொடர்பு உண்டு; அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் தொடர்பு உண்டு; ஆணவத்திற்கும் அழிவிற்கும் தொடர்பு உண்டு.

அழிவுக்குரிய ஆட்சிகள் எல்லாம் ஆணவம் கொண்டவைகளாக அதிகாரம் செலுத்தி ஆட்சி செய்கின்ற காரணத்தால் விரைவில் அழிந்து போகின்றன.

அழியாத ஆட்சி அதிகாரம் உடையதாகப் பேருள்ளம் இருந்தபோதிலும் அது ஆணவத்தின்பாற்படாமல் அன்பின் பாற்பட்டதாக ஆட்சி செய்கின்ற காரணத்தால் அன்பால் செய்யப்படும் அவ்வாட்சி, காலங்களைக் கடந்து செல்கின்றது. அன்பிற்கும் அழிவில்லை. ஆகவே, பேருள்ளத்தின் அன்பு நிறைந்த ஆட்சிக்கும் அழிவில்லை.

ஆகவே, பேருள்ளம் ஆணவத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அன்பை அடிப்படையாகக் கொண்டு இப் பேரண்டம் முழுவதையும் ஆட்சி செய்து வருகின்றது. பேருள்ளத்தோடு தொடர்புடைய சிற்றுள்ளமும் இயல்பாகவே பேருள்ளத்தின் ஆட்சிக்குப் பங்குடைய - உரிமை உடையதாக இருக்கின்றது.

இயல்பான இந்த ஆட்சி உரிமையினாலேயே சிற்றுள்ளம் மற்ற உயிரினங்களை எல்லாம் ஆளும் தன்மை உடையதாக

Koviloor Digital Library

இருக்கின்றது. அதனாலேயே மற்ற உயிரினங்கள் அனைத்தும் மனிதனுக்கு அடங்குகின்றன. மனிதனை எதிர்த்து மற்ற உயிரினங்கள் போரிட்டாலும் அவை தோல்வியையே சந்திக் கின்றன. காரணம், மற்ற உயிரினங்களையெல்லாம் ஆட்சி செய்யும் உரிமை மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், மனிதன் மற்ற உயிரினங்களை ஆட்சி செய்து காப்பாற்றுவதைவிட அவற்றை அடித்து உண்ணவும் அழிக்க வுமே தலைப்படுகின்றான். இவன் தனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைப் பேருள்ளத்தைப் போன்று அன்பின் அடிப் படையில் பயன்படுத்தாமல் ஆணவத்தின் அடிப்படையில் பயன்படுத்துகின்ற காரணத்தால் இவனுடைய ஆட்சி அழிவிற் குரியதாகி இவனும் வீழ்ந்து போகின்றான்.

இவன் பேருள்ளத்தின் வழியில், அன்பு நெறியில் செல் லாமல், அன்பு நெறிக்கு மாறான ஆணவ நெறிக்குச் செல்லு கின்றவனாக இருக்கின்ற காரணத்தால் அன்பும், ஆணவமும் அங்கு மோதிக் கொள்ளுகின்றன. அன்பு வெற்றி கொள்ளு கின்றது. ஆணவம் அழிகின்றது. இயல்பான ஆட்சிக்கு உரிய சிற்றுள்ளம், ஆணவம் கொண்டு இயல்பு மாறி; அன்பான பேருள்ளத்தின் தன்மையை அறிய இயலா நிலையில் ஆட்சி நிலையை இழந்து துன்பத்திற்குள்ளாகி விடுகின்றது. சிற்றுள்ளத்தின் இத்துன்பத்திற்கு மூல காரணமாய் இருப்பது ஆணவமே ஆகும். ஆணவம் தலைக்கு ஏறிய நிலையில் தனக்குமேல் ஒன்றுமில்லை என்ற நிலை தோன்றி, தானே எல்லாவற்றிற்கு அதிபதி என்று திசைமாறி, பேருள்ளமாகிய பேருள்ளத்தின் தன்மைகளைப் புரிந்து கொள்ளும் சக்தியை இழந்து அதை அவமதித்து "நானே தலைவன்", "நானே கடவுள்" என்று நினைக்கின்ற, கூறுகின்ற, செயல்படுகின்ற

Koviloor Digital Library

பரிதாப நிலையை அடைந்து வீழ்ச்சிக்குள்ளாகின்றது. சிற்றுள்ளம் வீழ்ச்சியடைந்த அந்த நிலையில் பேருள்ளத்தோடு அதற்கு இயல்பாய் இருக்க வேண்டிய தொடர்புகளையெல் லாம் அது இழந்துவிடுகின்றது: தன்னை அறிய முடியாமல், தன் தலைவனையும் அறிய இயலாமல், தன்னுடைய உயர்ந்த தன்மைகளையும், உரிமைகளையும் இழந்து மனித நிலையிலி ருந்து தாழ்ந்து விலங்கு நிலையை அடைந்துவிடுகின்றது. இந்த நிலையை விளக்கும் தொடரே 'Man is a social animal' என்பதாகும்.

விலங்கு என்பதிலும் மனிதன் 'தனிவிலங்கு' என்று சொல்லப்படாமல் ஒரு 'சமூக விலங்கு' என்று சொல்லப்படும் நிலையில் அவனால் சமூகத்துடன் கூடி வாழாமல் தனியாக வாழ இயலாது என்ற நல்ல கருத்து அடங்கி இருக்கின்றது. இது அவனுடைய வீழ்ச்சியிலும் முழு அழிவைக் குறிக்காமல் அவன் மீண்டும் எழக்கூடிய தன்மையின் கூற்றைக் கொண்டுள்ளதை விளக்குகின்றது.

இந்த நிலையை நாம் முன்னர்ப் பார்த்துள்ள மருள் நிலையோடு ஒப்பிடலாம். மேலே கூறப்பட்டுள்ளவற்றுள் சிற்றுள்ளத்தின் மூன்று நிலைகளை நாம் பார்க்கின்றோம்.

1. பேருள்ளத்தோடு இணைந்த நிலையில் பேருள்ளத்தின் அன்போடு தொடர்புடைய ஆட்சிக்கு உரிமை - உடன் ஆட்சி செய்யும் நிலை.

2. பேருள்ளத்தின் அன்புக்கு எதிராக ஆணவத்துக்கு உட்பட்டு, அன்புப் பேருள்ளத்தின் தொடர்பை இழந்த நிலை; தன்னுடைய சிறப்புகளை இழந்தநிலை.

Koviloor Digital Library

3. சிறப்புகளை இழந்த நிலையிலும் முழு அழிவுக்கு உட்படாமல் திரும்பவும் தன் பழைய நிலையை அடைவதற்குச் சிறிதளவு வாய்ப்பு இருக்கும் நிலை.

மேலே கூறப்பட்டுள்ள மூன்று நிலைகளையும் நாம் முன்பு பார்த்த 1. ஒளி, 2. இருள். 3. மருள் ஆகிய மூன்று நிலைக ளோடும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அறிவைப் பெறுவதற்குப் பயன்படும் உடல் உறுப்புகள் ஐந்தில் ஒன்றாகிய கண் செயல் பட வேண்டுமானால் அதாவது கண்ணால் மலரைப் பார்க்க வேண்டுமானால் அங்கு சூரியனுடைய துணை இன்றியமை யாததாகிறது. சூரியன் இல்லாவிட்டால கண் இருந்தும் அது செயல்பட முடிவதில்லை. கண்ணால் மலரைப் பார்ப்பதற்குச் சூரியன் இன்றியமையாதது. சூரியனை விட்டுப் பிரிந்த கண் தன்னை மறைக்கும் இருளினால் தன் செயல்பாட்டை இழக்கின்றது.

உடலுக்குப் புறம்பே இருக்கின்ற சூரியனோடு தொடர் பின்மையால் உடலின் புறத்தே காணப்படுகின்ற உடல் உறுப்புகளாகிய ஐந்தில் ஒன்றாகிய கண் தன் செயல்பாட்டை இழக்கின்றது.

அவ்வாறே, ஆறாவது அறிவைப் பெறுவதற்குக் காரணமான உடலின் உள்ளே இருக்கின்ற சிற்றுள்ளமானது, பேருள்ளத்திலிருந்து விலகுகின்ற காரணத்தினால் ஆணவ மாகிய அக இருளால் மூடப்பட்டுத் தன் செயல்பாட்டை இழக்கின்றது.

புறக்கண் செயல்பட புறக்கண்ணுக்கு ஒளி கொடுக்கும் புறச்சூரியனின் துணை இன்றியமையாதது. அவ்வாறே சிற்றுள்ளமாகிய அகக்கண் செயல்பட அக ஒளியைக்

Koviloor Digital Library

கொடுக்கும் அகச் சூரியனாகிய பேருள்ளத்தின் துணை இன்றியமையாதது ஆகும்.

இருள்நிலை – நானே கடவுள்

புறச் சூரியனின் தொடர்பு இல்லாத இடத்தில் புற இருள் நிறைந்திருக்கின்றது. அவ்வாறே அகச்சூரியன் இல்லாத இடத்தில் அக இருள் நிறைந்திருக்கின்றது. இந்த அக இருளின் நிலையே ஆணவ நிலை ஆகும்.

புற இருளின் நிலை கண் இருந்தும் பார்க்க இயலாத குருட்டு நிலை ஆகும். அக இருளின் நிலை அகக்கண் செயல்படாத ஆணவ நிலை ஆகும். ஆகவே, குருட்டு நிலை என்பதும், ஆணவ நிலை என்பதும் உள்ளத்தைப் பொறுத்த அளவில் வெவ்வேறு நிலைகள் அல்ல. இரண்டும் ஒன்றே.

முழு இருள் நிலை அல்லது முழு ஆணவ நிலை என்பது 'நானே கடவுள்' என்று கூறித் தன்னைக் கடவுளுக்கு மேலாக உயர்த்தி, கடவுளை எதிர்த்து நிற்கும் நிலை ஆகும். இது மழைக்காலத்து அமாவாசை நள்ளிருள் நிலையாகும்.

ஒளிநிலை – கடவுளுடன்

முழு ஒளி நிலை என்புது கடவுளை முழுமையாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்று, கடவுளோடு இணைந்து, எல்லாவற்றையும் முழுமையாக அறிந்து கொள்ளும் - கடவுளின் அன்பு ஆட்சியில் பங்கு கொள்ளும் நிலை ஆகும். இது நண்பகல் நிலையாகும்.

Koviloor Digital Library

மயக்க நிலை

மேலே கூறப்பட்ட இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையே நாம் முன்னர்ப் பார்த்த மருள் நிலையாகும். இந்நிலை கடவுளுக்கு மேலாகத் தன்னை உயர்த்தி 'நானே கடவுள்' என்று கூறுகின்ற இருள் நிலையும் அன்று; கடவுளை முழுவதும் அறிந்து கடவுளின் அன்பு ஆட்சியில் பங்கு கொள்ளும் ஒளி நிலையும் அன்று; இருளும், ஒளியும் கலந்த மருள் நிலையாகும். அந்தி மயங்கும் மயக்க நிலையாகும்.

மேலே கூறப்பட்டுள்ள மூன்று நிலைகளில் மனிதனாகப் பிறக்கின்ற ஒவ்வொருவருடைய இயல்பும், பாம்பைக் கயிறாக எண்ணுவதும், கயிற்றைப் பாம்பாக எண்ணுவதுமாகிய மயக்க நிலைக்கு உட்பட்டதாகவே இருக்கின்றது.

இந்த மயக்க நிலையின் காரணமாகவே மனிதனுடைய ஆறாவது அறிவாகிய நன்மை, தீமை அறியும் பகுத்தறிவு சரியான முறையில் செயல்பட முடியாததாகி நன்மையைத் தீமையாகவும், தீமையை நன்மையாகவும் மயக்கத்தில் முடிவெடுக்கின்ற மருள்நிலையில் இருக்கின்றது.

துணை தேவை

இருளும், ஒளியும் கலந்த மருள்நிலை நீங்கி நிலையான நன்மை எது, நிலையான தீமை எது என்பதை உள்ளம் அறிந்து தெளிவு பெற வேண்டுமானால் ,அகச் சூரியனாகிய பேருள்ளத்தின் துணை சிற்றுள்ளத்திற்குத் தேவை.

சிற்றுள்ளம் மயக்க நிலையில் இருக்கின்ற காரணத்தால் அது தானாக மயக்கம் அல்லது மருள் நிலையிலிருந்து விடுதலை பெற்று, பேருள்ளத்தை அடைய முடியாது.

பேருள்ளம் அன்பின் மிகுதியினால் அருள் கொண்டு தம் ஒளியைச் சிற்றுள்ளத்தின் மீது வீசும்பொழுது சிற்றுள்ளம் மயக்க நிலையிலிருந்து விடுதலை பெறுகிறது.

உள்ளத்திற்கு உரிமை

ஆனால், இங்கு ஒரு குறிப்பு ஆழ்ந்த எண்ணத்தக்கது. புறச் சூரியனின் புற ஒளியை வேண்டாம் என்று தடுத்துக் கண்களை இறுக மூடிக் கொண்டு இருளை விரும்பும் ஒருவனை, புறச் சூரியனின் ஒளி ஒன்றும் செய்து விடமுடியாது. அதே போன்று அகச் சூரியனாகிய பேருள்ளம் அன்பின் மிகுதியினால் அருள் கொண்டு அக ஒளியை வீசும்பொழுது அதை வேண்டாமென்று தள்ளிவிட உள்ளத்திற்கு உரிமை இருக்கின்றது. அந்த உள்ளம் இருளையே விரும்புகின்ற காரணத்தால் அதனிடத்தில் ஒளி வீசப்பட்டும் அந்த ஒளியை அதனால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

ஒளியின் செயல்பாட்டில் இருப்பவர்கள் ஒளியை விரும்புவார்கள். அவ்வாறே, இருளின் செயல்பாட்டில் இருக்கின்றவர்கள் இருளை விரும்புவதே இயற்கையாகும்.

ஒளியின் செயலும், இருளின் செயலும்

ஒளியின் செயல்கள் வெளிப்படையானவை; எல்லோருக்கும் தெரியக்கூடியவை; எல்லோராலும் விரும்பப்

Koviloor Digital Library

படக் கூடியவை; எல்லோருக்கும் நன்மையானவை; மனித சமுதாயப் பொது நலனுக்கு உரியவை.

இருளின் செயல்கள் மறைவானவை; மற்ற மனிதர்களுக்குத் தெரியக்கூடாதவை; எல்லோருக்கும் தீமையானவை; மனித சமுதாயப் பொது நலனுக்கு எதிரானவை.

ஒளியின் செயல்கள் எல்லோருக்கும் நன்மை பயக்கக் கூடியவை என்பதில் அச்செயல்களைச் செய்பவர்க்கும் அதனால் தொடர்புடைய மனித சமுதாயத்திற்கும் நன்மையை உருவாக்கும் என்ற பொருள் அடங்கியிருக்கிறது.

அவ்வாறே, இருளின் செயல்கள் எல்லோருக்கும் தீமை பயக்கும் என்பதில், மனித சமுதாயத்திற்குத் தீமையை ஏற்படுத்தும் செயல் அது என்பதுடன் அச்செயலைச் செய்ப்வர்க்கும் தீமையே ஏற்படும் என்ற பொருள் அதில் அடங்கி இருக்கின்றது.

ஒரு சமுதாயத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் ஒளியின் செயல்பாடுகளை உடைய்வர்களாக இருந்தால் சமுதாயம் முழுவதும் நன்மையினால் நிறைந்து மகிழ்ச்சியோடு வாழும்.

அவ்வாறே, ஒரு சமுதாயத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் இருளின் செயல்பாடுகளை உடையவர்களாக இருந்தால் அச்சமுதாயம் முழுவதும் தீமையில் ஆழ்ந்து துன்பத்தில் அழிவுறும்.

ஆகவே, ஒளியின் செயல்பாடுகள், செய்கின்றவர்களுக்கும் அவர்கள் சார்ந்துள்ள மனித சமுதாயத்திற்கும் மகிழ்ச்சியான வாழ்வைக் கொடுக்கும் வாழ்வுக்குரியதாகின்றன.

Koviloor Digital Library

இருளின் செயல்பாடுகள், செய்கின்றவர்களுக்கும் அவர்கள் சார்ந்துள்ள மனித சமுதாயத்திற்கும் துன்பத்தைக் கொடுக்கும் அழிவுக்குரியதாகின்றன.

தனிமனிதன் - மனித சமுதாயம் - பேருள்ளம் ஆகிய மூன்றுக்கும் மிகமிக நெருங்கிய தொடர்புண்டு. தனிமனிதனின் நன்மையும், தீமையும் சமுதாயத்தைப் பாதிக்கின்றன என்பதைப் பார்த்தோம். தனிமனிதனின் செயல்பாடுகளுக்கும் பேருள்ளத்திற்கும் உள்ள தொடர்பையும் பார்த்தோம். பேருள்ளத்தோடு இணைந்த வாழ்வைப் பெறுகின்றவர்கள் மனித சமுதாயத்துக்கு நன்மை செய்கின்றவர்களாக மாறுகின் றார்கள். பேருள்ளத்தின் தொடர்பை வெறுக்கும் பேருள்ளத் திற்கு எதிரான வாழ்க்கை உடையவர்களாக மனித சமுதாயத் திற்குத் தீமை விளைவிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

சமுதாயப் பொதுநலன்

ஆகவே, பேருள்ளம் என்பதும் உலக மனித சமுதாயப் பொது நலன் என்பதும் ஒன்றொடொன்று மிக நெருங்கிய தொடர்புடையவையாக இருக்கின்றன.

மனித சமுதாயத்திற்கு நன்மைசெய்கின்றவன் பேருள்ளத்தோடு தொடர்புடையனவாகவும் தனக்குத் தானே நன்மை செய்கின்றவனாகவும் வாழ்வுக்குரியவனாகவும் விளங்குகின்றான்.

மனித சமுதாயத்திற்குத் தீமை செய்கின்றவன் பேருள்ளத்திற்கு எதிரானவனாகவும் தனக்குத்தானே தீமை செய்து கொள்ளுகின்றவனாகவும் அழிவுக்குரியவனாகவும் விளங்குகின்றான்.

Koviloor Digital Library

பகுத்தறிவு

மேலே கூறப்பட்டுள்ள வாழ்வையும், அழிவையும், நன்மையையும், தீமையையும் பகுத்து அறியும் பகுத்தறிவே மனிதனுக்குச் சிறப்பாக உள்ள ஆறாவது அறிவாகும்.

உடலுக்குரிய நன்மை, தீமையைப் பகுத்து அறிந்து உடல் வாழ்வை ஓம்பும் வாழ்க்கை விலங்கு வாழ்க்கை ஆகும். அவ்வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது இயல்பூக்கமே ஆகும்.

உலக மனித சமுதாயத்திற்கான, நன்மை, தீமைகளைப் பகுத்து அறிந்து தீமையை விட்டு விலகி நன்மை செய்து வாழ்தலே பகுத்தறிவு வாழ்வாகும். இவ்வாறு வாழ்தலே ஆறாவது அறிவைப் பெற்றிருக்கின்ற மனித வாழ்வுக்குரிய வாழ்வு நெறி என்பதையும் அதையே பேருள்ளத்தோடு தொடர்புடைய பெருமகிழ்ச்சிக்குரிய வாழ்வு என்பதையும் அனுபவித்தவர்களே அறிவார்கள். இந்த அனுபவ இன்பமே தனி மனிதனையும் மனிதசமுதாயத்தையும், கடவுளையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக விளங்குகிறது.

கடவுளும் மனிதனும் இதில் இணைகின்றார்கள்.

உலக மனித சமுதாயப் பொது நலனைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டவர்கள் நாஸ்திகர்கள் என்ற பெயரில் இருந்தாலும் உண்மையில் அவர்கள் ஆஸ்திகர்களே. பேருள்ளத்தோடு தொடர்புடையவர்களே; பேருள்ளத்தின் விருப்பத்தை நிறைவேற்றியவர்களே.

Koviloor Digital Library

உலக மனித சமுதாயப் பொது நலனைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் தன்னலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டவர்கள் ஆத்திகப் போர்வையில் கடவுள் இருக்கின்றார் என்று சொன்னவர்களாக வாழ்ந்திருந்தபோதிலும் உண்மையில் அவர்கள் நாஸ்திகர்களே, கடவுளை அறியாதவர்களே. அது மட்டுமன்று, கடவுளுக்கு எதிரானவர்களே.

ஏனெனில், கடவுளும் உலக மனித சமுதாயப் பொதுநலனும் பிரிக்க முடியாதவை. இரண்டும் ஒன்றே. இதை அறிவதே மனிதனுக்கு மட்டுமே உரிய உண்மையான பகுத்தறிவாகும். ஆறாவது அறிவாகும்.

ஆறாவது அறிவாகிய பகுத்தறிவின் பயன் உலகம் முழுவதும் மகிழ்ச்சியோடு வாழ்வதாகும். அதுவே சிற்றுள்ளம் பேருள்ளத்தோடு இணைந்து வாழும் இன்ப வாழ்வு ஆகும்.

கோவிலூர் ஆதீனம்
2432
R65
கோவிலூர்-630307